டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 14.05.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 270 - Madurai | Online Edition

# 2026-27 சந்தைப் பருவத்திற்கான காரீப் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

புதுதில்லி, மே 13

2026-27 சந்தைப் பருவத்திற்கான 14 காரீப் பயிர்களின் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை அதிகரிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு நேற்று ஒப்புதல் அளித்துள்ளது.

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய விலைகளை உறுதி செய்யும் வகையில், 2026-27 சந்தைப் பருவத்திற்கான காரீப் பயிர்களைக் குறைந்தபட்ச ஆதரவு விலையை மத்திய அரசு அதிகரித்துள்ளது.

முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் சூரியகாந்தி விதைக்கு ஒரு குவிண்டாலுக்கு 622 ரூபாயும், பருத்திக்கு குவிண்டாலுக்கு 557 ரூபாயும், நைஜர் விதைக்கு குவிண்டாலுக்கு 515 ரூபாயும், எள்ளுக்கு குவிண்டாலுக்கு 500 ரூபாயும் அதிகரிக்கப்பட்டு உள்ளது. தொழிலாளர் கூலி, எந்திர வாடகை, நிலக் குத்தகைக் கான வாடகை, விதைகள், உரங்கள், எரு போன்ற இடுபொருட் களை பயன்படுத்துவதற்கு ஏற்படும் செலவுகள், பாசனத்திற் கான செலவுகள், வேளாண் கருவிகள் மற்றும் பண்ணைக் கட்டடங்களில் ஏற்படும் தேய்மானச் செலவுகள் உள்ளிட்ட நேரடி செலவுகளையும் மற்றும் இதர செலவுகளையும் இது உள்ளடக்கியுள்ளது.

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு மீது கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் லாப விகிதம் பாசிப்பயிருக்கு அதிகபட்சமாக 61 சதவீதமாகவும், கம்பு, மக்காச் சோளம் பயிர்களுக்கு தலா 56 சதவீதமாகவும், துவரம் பருப்புக்கு 54 சதவீதமாகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு கரும்பில் பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி மற்றும் செயல்விளக்கம்




திருச்சி, மே 13

திருச்சிராப்பள்ளி மாவட்டம், கரும்பு ஆராய்ச்சி நிலையம் சிறுகமணி மற்றும் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் குமுளூர் இணைந்து கரும்பில் இயந்திர மயமாக்கல் மற்றும் ஒரு பரு கரணை வெட்டும்கருவி பற்றிய செயல்விளக்கப் பயிற்சி 13.05.26 அன்று சிறுகமணியில் நடைபெற்றது. கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் க.அண்ணாதுரை, கரும்பு சாகுபடி செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து பயிற்சியை தலைமை தாங்கி துவக்கி வைத்தார்.

சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ந.புனிதவதி, சிறப்புரை யாற்றினார். மேலும், கூறுகையில் கரும்பு சாகுபடியில் விதைக் கரணையின் விதை நேர்த்தி மற்றும் இயந்திரமயமாக்கலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

குமுளூர் வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய இணைப்பேராசிரியர் (வேளாண் இயந்திரம்) முனைவர் ப.காமராஜ் பல்வேறு இயந்திரங்கள் செயல்படும் விதங்களை எடுத்துரைத்தார். மேலும் கரும்பு தோகை உரிக்கும் கருவி, கரணை வெட்டும் கருவி, கரும்பில் களை எடுக்கும் இயந்திரம், கரும்பு தாய் குருத்து வெட்டும் கருவி, கரும்பு சாகுபடிகள் மற்றும் இதர கருவிகள், அதன் செயல்பாடுகளும், அதன் பயன்பாடுகளும் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத் தார். இக்கருவிகளின் செயல்விளக்கம் செயல்படுத்தி காண்பிக் கப்பட்டது. இப்பயிற்சியில் 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் முனைவர் வே.அன்பானந்தன், கரும்பில் அதிக மகசூல் எடுப்பதற்கான தொழில்நுட்பங்களை எடுத்துரைத்து நன்றியுரை வழங்கினார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# தென்மேற்கு வங்கக்கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது

சென்னை, மே 13

தென்மேற்கு வங்கக்கடலில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுவடைந்தது என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. எனவே, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என தெரிவித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை தெற்கு வங்கக்கடலின் சில பகுதிகள், அந்தமான் கடல் பகுதிகள், அந்தமான் மற்றும் நிகோபார் தீவு பகுதிகளில் 16 ஆம் தேதி வாக்கில் துவங்கக்கூடும். 12.05.26 அன்று தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு பகுதி, வடக்கு திசையில் நகர்ந்து, மே 13 காலை 08.30 மணி அளவில் தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்தியமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் வலுப்பெற்று ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று மே 14ல் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களிலும், காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

மே 15ல் தென் தமிழக கடலோர மாவட்டங்கள், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். கோயம்புத்தூர் மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## குழந்தைகளுக்கான ஆரோக்கியமான / வயது வரம்பிற்கேற்க ஸ்நாக்ஸ் வகைகள்

நேற்றைய தொடர்ச்சி...

குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு சத்தான மற்றும் சுவையான ஸ்நாக்ஸ் மிகவும் அவசியம். இங்கே 3-6 வயது மற்றும் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஆரோக்கிய மான ஸ்நாக்ஸ் குறிப்புகள் தொகுத்து அளித்துள்ளேன்.

**2. 3-6 வயது குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள்**

இந்த வயதில் குழந்தைகள் அதிக சுறுசுறுப்புடன் இருப்பார்கள். அவர்களுக்கு ஆற்றல் தரும் மற்றும் பல் வளர்ச்சிக்கு உதவும் சற்று கடினமான ஸ்நாக்ஸ்களை கொடுக்கலாம். அதே சமயம், சத்தானதாகவும் இருக்க வேண்டும்.



**நட்ஸ் மற்றும் உலர் பழங்கள்**

பாதாம், முந்திரி, உலர் திராட்சை, அத்திப்பழம் போன்றவற்றை அளவோடு கொடுக்கலாம். ஆற்றல் மற்றும் அத்தியாவசிய தாதுக்கள் நிறைந்தது.

**இட்லி / தோசை**

மீந்துபோன இட்லி அல்லது தோசையை சிறிய துண்டுகளாக நறுக்கி, சிறிது நெய் சேர்த்து வறுத்து கொடுக்கலாம்.

***நாளைய தொடரில் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கான ஸ்நாக்ஸ் குறிப்புகள் இடம் பெறும்.***

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

தலைக் கவசம் உயிர்க் கவசம்

# யூரியா மற்றும் மானிய விலை உரங்களை வேறு மாவட்டத்திற்கு விற்பனை செய்தால் உரம் உரிமை ரத்து : எச்சரிக்கை

பெரம்பலூர், மே 13

யூரியா மற்றும் மானிய விலையில் விற்பனை செய்யக்கூடிய உரங்களை வேறு மாவட்டத்திற்கு விற்பனை செய்வதை அறிந்தால் உரம் உரிமை ரத்து செய்வது உடன் அத்திவாசிய பொருள் தடை சட்டம் 1955 படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண்மை துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.



பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன், பெரம்பலூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை திடீர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது உரங்களை விற்பனை நிலையத்தில் பெற்ற பிறகு வேறு ஒரு மாவட்டத்திற்கோ மாற்றப்பட்டு இருப்பதை அறிந்தால் உடனடியாக உரிமைத்தை ரத்து செய்வதுடன் அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 இன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

மேலும், உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும், விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும்.

எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும் .உரம் வைத்திருக்கும் கிடங்குகளுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்,

உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதிதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும். உரம் முட்டையில் அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது என்று கூறினார்,

மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன்படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது.

விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு உதவி விவசாயிக்கு வழங்க வேண்டும்,

நானோ யூரியா, நானோ டி ஏ பி விவசாயிகளுக்கு எடுத்து கூறி பயன்படுத்த வேண்டும், வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினார்.



# விதை மூலம் பரவும் நோய்களை கட்டுப்படுத்தும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்

நல்ல பயிர் உற்பத்திக்கு தரமான விதையின் பங்கு இன்றியமையாததாகும். நல்ல தரமான விதைகளின் பயன்பாடு மட்டுமே 15 சதவீதம் அதிக விளைச்சலுக்கு வழி வகுக்கிறது. விதையின் முளைப்புத்திறன், நாற்றுகளின் வீரியம் மற்றும் வளர்ச்சி ஆகியவை விதையின் தரத்தை பொறுத்தே அமைகின்றன.






பயிர்களைத் தாக்கும் நோய்க் கிருமிகளான பூஞ்சை, பாக்டீரியா, நச்சுயிரி மற்றும் நூற்புழுக்கள் ஆகியவை விதைகள் மூலம் பரவி பெருத்த இழப்பை ஏற்படுத்துகின்றன. (எ.கா) நெற்பயிரைத் தாக்கும் செம்புள்ளி நோய், குலைநோய் மற்றும் பாக்டீரியா இலைக் கருகல் நோய் விதைகளை தாக்குவதுடன் விதை வழியாக பரவி நோயை ஏற்படுத்தும். இக்கிருமிகள் இளம் பயிர்களுக்கு நோயை உண்டாக்கி பயிர்களின் எண்ணிக் கையை குறைத்து விளைச்சல் பாதிக்கிறது. விதை மூலமாக பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை பின்பற்ற வேண்டும். தரமான சான்றளிக்கப்பட்ட விதைகள் மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட ரகங்களை பயன்படுத்த வேண்டும். பயிர்களை சரியான பருவகாலங்களில் விதைக்க வேண்டும். பருவம் தவறி விதைப்பதனால் பல நோய்களால் தாக்கப்படுவதற்கு ஏதுவாக இருக்கும். விதை நேர்த்தி செய்வதால் விதை முளைக்கும் போதும், நாற்றுகள், வளரும் போதும் நோய்த் தாக்காத வண்ணம் பயிர்கள் பாதுகாக்கப் படுகிறது. மேலும், மண் வழியாக நோய் பரவும் நுண்ணுயிர் காரணிகளையும் அழித்து விடுகிறது. இதனால் பயிர்கள் 20-25 நாட்களுக்கு நோய்த் தாக்கப்படாமல் பாதுகாக்கப்படுகிறது.

பயிர் வளர்ச்சியின் போது களைகளை உடனுக்குடன் அப்புறப் படுத்தி வயலை தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டும். அளவான உரம் இடுவதால் பயிர்களில் நோய்த் தாக்கப்படுவது குறையும். அதிக அளவு உரங்களை பயன்படுத்துவதால் பயிர்களின் நோய் எதிர்ப்புத் திறன் குறையும். (எ.கா) நெற்பயிரில் அதிக அளவு தழைச்சத்து இடுவதால் குலைநோய் போன்றவை அதிகமாக காணப்படும். சரியான முதிர்ச்சி பருவத்தில் பயிர் அறுவடை செய்யப்பட வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் அவை விதையின் தன்மையை பாதிக்கும்.



இதனால் விதை மூலம் பரவும் நோய்கள் மற்றும் பாதிப்பு களைக் கட்டுப்படுத்தலாம். அதிக ஈரப்பதத்தில் விதைகளை அறுவடை செய்வதனால் அவை பூசணங்கள் வளர்வதற்கு ஏதுவாக இருக்கும். அதனால் சரியான ஈரப்பதத்திற்கு பயிரை அறுவடை செய்வது உகந்தது. இத்தகவலை நாகர்கோவில் விதைப்பரிசோதனை ஆய்வக மூத்த வேளாண்மை அலுவலர் ஜி.அஷ்ரப் முகைதீன் தெரிவித்துள்ளார்.

# விவசாயிகள் அனைத்து அரசு திட்டங்களிலும் பயன் பெற நிலவுடைமை பதிவு கட்டாயம்

திருச்சி, மே 13

விவசாயிகள் நலன் சார்ந்த திட்டங்களை செயல்படுத்தும் வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் வணிகம், கால்நடை பராமரிப்பு, கூட்டுறவு மற்றும் வருவாய் உள்ளிட்ட 24 துறைகளில் மானிய திட்டங்களின் பலன்களை பெறுவதற்கு நிலவுடைமை பதிவு கட்டாயம் என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் பூ.வசந்தா, தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட துறைகளின் திட்ட பலன்களை பெறுவதற்கு ஒவ்வொரு முறையும் விண்ணப்பித்து ஆவணங்களை சமர்ப் பிக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு முறை நில உடைமையை பதிவு செய்து விட்டால் அதையே பயன்படுத்திக் கொள்ளலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் அவர்களின் சொந்த கிராமங்களிலோ அல்லது சொந்த கிராமங்களை விட்டு வேறு எந்த பகுதியில் இருந்தாலும் அருகில் உள்ள அனைத்து அரசு அங்கீகாரம் பெற்ற பொது சேவை மையங்களில் தங்கள் நில உடைமை விவரங்களை பதிவு செய்ய ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. அனைத்து விவசாயிகளும் தங்கள் அருகில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற பொது சேவை மையத்தை பயன்படுத்தி தங்களுடைய பட்டா, கூட்டு பட்டா, ஆதார் அட்டை, அலைபேசி கொண்டு சென்று பதிவு செய்து, இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளலாம். மேலும், அனைத்து வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் நில உடைமைகள் மற்றும் இதர விவரங்களை விவசாயிகள் முன்னிலையில் சரி பார்த்து விவசாயிகளின் ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே பதிவேற்றம் செய்யப்பட்டு அடையாள எண் வழங்கப் படும்.



இவ்வாறு பதிவு செய்து பெறப்படும் தனித்துவ விவசாயி அடையாள எண் மூலமாக மட்டும் இனிவரும் காலங்களில, உரங்கள் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பயன்களை ஒற்றை சாளர முறையில் விவசாயிகள் பெற முடியும்.

மேலும், பிரதம மந்திரி கௌரவ நிதியுதவி (PMKISAN) திட்டத்தின் கீழ் 99,661 விவசாயிகள் பயன் பெற்று வருகின்றனர். இதுவரை, 82,146 விவசாயிகள் பதிவு செய்து தனித்துவ அடையாள எண் பெற்றுள்ளனர், மீதமுள்ள 17,515 விவசாயிகள் உடனடியாக பதிவு செய்தால் மட்டுமே பி.எம்.கிசான் திட்டத்தில் தொடர்ந்து பயன் பெற முடியும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் 15.05.26க்குள் பதிவு செய்து அடையாள எண் பெற இதுவே இறுதி வாய்ப்பாகும் என திருச்சிராப்பள்ளி, மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம்



கடலூர், மே 13

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில் 12.05.26 அன்று, உரங்களின் சமச்சீர் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் நடைப்பெற்றது. இதில் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், கலந்துக் கொண்டு நிலங்களின் சத்துக்களுக்கு ஏற்றவாறு உர பரிந்துரையும், யூரியா மற்றும் டி.ஏ.பி அதிகமாக பயன்படுத்துவதால் நிலத்திற்கு ஏற்படும் தீமைகளை பற்றி விளக்கினார். மேலும் முனைவர் க.கலைச்செல்வி, உயிர் உரங்கள், பசுந்தாள் உரங்கள் மற்றும் தொழுஉரங்கள் பயன்பாடுகளை அதிகரிப்பதன் மூலம் மண்ணில் பேரூட்டம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் மேம்பாடு பற்றியும் மற்றும் மண்ணிற்கு உரமிடும் போது மண் வள அட்டையில் பரிந்துரைத்த உர பரிந்துரைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். இப்பயிற்சியில் முனைவர் சிவசங்கர், தோட்டலைக் கலை துறை பயிர்களில் ஊட்டச்சத்து மேலாண்மை பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், விருத்தாசலம் வட்டாரத்தை சேர்ந்த 70–க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# வி.பி.ஜி ராம் ஜி திட்டம் ஜூலை 1ல் ஆரம்பம்? தெரியுமா?



இது ஏதோ ஒரு திட்டம் என்று திகைப்புடன் நினைப்பது எனக்கு தெரியும். இது வேறு ஒன்று மில்லை. அதாவது பழைய 100 நாள் வேலை உறுதி திட்டத்திற்கு மாற்றாக வந்த 125 நாள் வேலை வாய்ப்பு உறுதி திட்டம் தான் (VIKSIT BHARAT GUANANTEE FOR ROZGAR AND AJEEVIKA MISSION) GRAMIN என புதிய பெயர் மாற்றத்துடன் ஜூலை 1யில் ஆரம்பமாகிறது.

### இதனுடைய முக்கிய நோக்கம்

DEVELOPED VILLAGES AS A FOUNDATION FOR DEVELOPED INDIA) வேலைவாய்ப்பு வளர்ந்த கிராமங்களை உருவாக்கிறது. வளர்ந்த கிராமங்கள் வளர்ந்த தேசத்தை உருவாக்கும் என்பதே இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்து மாநிலங்களிலும் மற்றும் யூனியன் பிரதேசங் களில் நடைமுறைப்படுத்தப்படும்.

### எப்படி அறிமுகம் செய்யப்பட்டது?

பழைய மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் 2005யில் ஆரம்பமாகி தற்போது நடைமுறையில் உள்ளது. இதை சுருக்கமாக (MGNREGA) என்று அழைக்கப்பட்டது. இது ஜுன் 30, 2026 வரை நடைமுறையில் இருக்கும். 2026-27 நிதியாண்டில் இந்த திட்டத்திற்கு 95,692.31 கோடி ரூபாயாக ஒதுக்கப்பட்டுள்ளது. மாநிலங்களின் பங்களிப்பை சேர்த்தால் 1.51 லட்சம் கோடியை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பழைய திட்டத்திற்கும் புதிய திட்டத்திற்கும் உள்ள வேறு பாடுகள் என்னென்ன?

பழைய திட்டத்தில் 100% செலவினம் முழுக்க முழுக்க மத்திய அரசே நேரடியாக செயல்படுத்தியது.

ஆனால் தற்போதைய (VB- G RAM G) திட்டத்தில் 60:40 RATIO மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் செயல் படுத்த முடிவு செய்துள்ளது.

**திட்டத்தின் செயலாக்கம் எவ்வாறு?**

1) புதிய கிராமின் ரோஸ்கார் வேலை உத்தரவாத அட்டைகள் தரப்படும் வரை தற்போதுள்ள இ-கேஓய்சி (E-KYC) சரிபார்க்கப்பட்ட MGNREGA அட்டைகள் செல்லுபடியாகும்.

2) நிலுவையில் உள்ள இ.கேஓய்சி காரணமாக தொழிலாளர் களுக்கு வேலை மறுக்கப்பட்டாது. பழைய நடைமுறைபடி ( NATIONAL MOBILE MONITORING SYSTEM) மூலமாக வருகை கண்காணிக்கப்படும்.

3) பணி அட்டை இல்லாதவர்களுக்கான பதிவு கிராம பஞ்சாயத்து அளவில் தொடரும்.

4) மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களுடன் கலந்தாலோ சித்து ஊதிய குறைபாடு சரி செய்யப்படும். இதற்கான விரைவு விதிகள் விரைவில் வெளியிடப்படும்.

**இதுவரை எத்தனை பேர் திட்ட பயனாளிகள் தெரியுமா?**

கடந்த 7 மே 2026 கணக்கின்படி 11.58 கோடி நபர்கள் வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தில் பதிவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

**விபிஜி– ராம் ஜி திட்ட பயன்கள்?**

1) தற்போதைய 100 நாள் வேலைக்கு பதிலாக ஒவ்வொரு கிராம புறங்களிலும் ஆண்டுக்கு 125 நாள்கள் கட்டாய வேலை உறுதி அளிக்கப்படும்.

2) நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் வேலை தரப்படா விடில், தொழிலாளர்களுக்கு வேலையில்லாத உதவி தொகை (STIPEND) வழங்கப்படும்.

3) தொழிலாளர்களுக்கு ஊதியம் நேரடியாக வழங்காமல் வங்கி/தபால் நிலைய கணக்கு வாயிலாக வாராந்திர அடிப்படை அல்லது 15 நாளைக்கு ஒரு முறை வழங்கப்படும்.

4) இதில் காலதாமதம் ஏற்பட்டால் இழப்பீடு வழங்க சட்டத்தில் இடமுண்டு.

**என்னென்ன அடிப்படை பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் தெரியுமா?**

நீர் பாதுகாப்பிற்கான நீர் சார்ந்த பணிகள், நிலையான வருமானத்திற்கான வாழ்வாதார கட்டமைப்புகள் உருவாக்குதல், வலுவான கிராம புற கட்டமைப்பு, காலநிலை தாங்கும் திறன் மற்றும் பேரிடர் தயார் நிலை.

என்ன? புதிய வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தை வரவேற்போம். நடைமுறையில் ஏற்படும் சிக்கல்களை கண்டறிந்து களைய முற்படும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# தென்னையில் ரூகோஸ் வெள்ளை ஈ தாக்குதலும் மேலாண்மை முறைகளும்



தென்னை மற்றும் பல பயிர்களைத் தாக்கும் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ (Rugose Spiraling Whitefly - RSW) ஒரு ஆக்கிரமிப்பு பூச்சியாகும். இது இலைகளின் அடிப்பகுதியில் சுருள் வடிவில் முட்டையிட்டு, சாற்றை உறிஞ்சி, பசை போன்ற திரவத்தைச் சுரந்து கருப்புப் பூஞ்சை காளானை உருவாக்கு கிறது. பொதுவாக இந்த பிரச்சனை அதிக வெப்பநிலை காரணமாக தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. அதேபோல் தொடர்ச்சியாக வறண்ட வெப்பநிலை அதிகரித்ததால் இந்த பூச்சியின் தாக்குதல் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. வயதில் முதிர்ந்த பெண் வெள்ளை ஈக்கள், மஞ்சள் நிறமுள்ள நீள் வட்ட முட்டைகளை சுழல் வடிவ அமைப்புகளில் ஓலைகளின் அடிப் பகுதியில் இடும். மெழுகுப் பூச்சுடன் காணப்படும் முட்டைகளி லிருந்து வெளிப்படும் இளம்குஞ்சுகள் மற்றும் முதிர்ந்த ஈக்கள் ஓலைகளின் அடிப்பரப்பில் இருந்து சாற்றை உறிஞ்சும். இவை வெளியேற்றும் தேன் போன்ற திரவம் கீழ்மட்டஓலைகளிலிருந்து படியும். அதன் மேல், கேப்னோடியம் என்ற கரும்பூசணம் படர்கிறது. இதனால், ஒளிச்சேர்க்கை தடைபடுகிறது. இப்பூச்சிகள் தென்னை மட்டுமில்லாமல், வாழை, பாக்கு, சப்போட்டா ஆகிய பயிர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்புள்ளது.

## தென்னையை பாதிக்கும் ரூகோஸ் வெள்ளை ஈ தடுப்பது எப்படி?

### மேலாண்மை முறைகள்



**தென்னையை பாதிக்கும் ரூகோஸ் சுருள் வெள்ளை**

● தென்னை ஓலைகளின் அடிப்பகுதியில் அதிக அழுத்தத்துடன் தண்ணீரைப் பீய்ச்சி அடிப்பதன் மூலம் வெள்ளை ஈக்கள், கூட்டுப் புழுக்கள் மற்றும் மெழுகுப் பூச்சுகளைக் குறைக்கலாம்.



● ஏக்கருக்கு 20 முதல் 30 மஞ்சள் ஒட்டுப்பொறி அட்டைகளில் ஆமணக்கு எண்ணெய் தடவி, தென்னை மரங்களில் 6 அடி உயரத்தில் தொங்கவிட வேண்டும். இது வளர்ந்த ஈக்களைக் கவர்ந்து அழிக்கும்.

● 1 லிட்டர் தண்ணீரில் 25 கிராம் மைதா மாவை வெந்நீரில் கலந்து பசை போன்ற கரைசலை உருவாக்கி, தெளிப்பான் மூலம் ஓலைகளின் அடிப்பகுதியில் தெளிக்கலாம்.

● ஏக்கருக்கு 400 முட்டைகள் என்ற அளவில் பச்சை லேஸ் விங் (கிரிசோபெர்லா அல்லது அப்பெர்டோக்ரைசா அஸ்டர்) பூச்சிகளை விடுவிக்கவும்.

● என்கார்சியாகுவாடலூபே என்ற இயற்கை எதிரி ஒட்டுண்ணி குளவிகளை வயலில் விடுவிப்பதன் மூலம் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ திறம்பட கட்டுப்படுத்தலாம்.

● வேப்பஎண்ணெய் (10,000 ppm) 2 மிலி/லிட்டர் அல்லது வேப்பங்கொட்டை கரைசல் (5%) தெளிக்கலாம்.

● நிலைமை மிகக்கடுமையாக இருந்தால் மட்டும், இலைகளின் அடிப்பகுதியில் காய்கறி மற்றும் பழப்பயிர்களுக்கு பரிந்துரைக்கப்படும் பூச்சிக்கொல்லிகளை வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையுடன் தெளிக்கலாம்.

● பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்குக் கீழ் உள்ள களைகளை அகற்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

● இரசாயன பூச்சிக்கொல்லித் தெளிப்புகளைக் கண்டிப்பாகத் தவிர்க்கவும், ஏனெனில் அவை இயற்கை எதிரிகளை அழித்து, பூச்சிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வழிவகுக்கும்.

இந்த ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகளை (IPM) கடைபிடித்து ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த முடியும்.



**என்கார்சியாகுவாடலூபே இயற்கை எதிரி ஒட்டுண்ணி**



**கிரிசோபெர்லா/ அப்பெர்டோக்ரைசா**

தகவல் : *கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர். 82480 80922.*

# கோடை உழவின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி அறிவுரை

சேலம், மே 13

சேலம் மாவட்டம், அயோத்தியாபட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப்பிரியா கோடை உழவின் முக்கியத்துவம் குறித்து கூறியுள்ளதாவது:-

கோடை காலத்தில் ஏப்ரல்-மே மாதங்களில் மண்ணை 50 சென்டிமீட்டர் ஆழத்துக்கு மண்வெட்டி அல்லது உளிக் கலப்பை கொண்டு ஆழமாக உழுவதே கோடை உழவாகும். அவ்வாறு ஆழமாக உழுவதால் நிலம் பொலபொலப்பாகி மழை நீரை சேமிக்கவும், மண்ணின் சத்துக்களை அதிகரிக்கவும், பூச்சிகள், களைகள் மற்றும் நோய் கிருமிகளை சூரிய வெப்பத்தால் அழிக்கவும் உதவுகிறது.

மண்ணில் காற்றோட்டம் அதிகரித்து, நுண்ணுயிரிகளின் செயல்பாடு மேம்படுகிறது. மண்ணில் உள்ள புழுக்கள், முட்டைகள், களையின் விதைகள் வெயிலில் காய்ந்து அழிகின்றன.

ஆழமாக உழுவதால் அடுத்து வரும் மழை நீர் மண்ணில் ஆழமாக இறங்கி, ஈரத்தை தக்க வைக்கிறது. மண்ணில் காற்றோட்டம் அதிகரிப்பதால், அங்கக பொருட்கள் சிதைக்கப் பட்டு தாவரங்களுக்கு தேவையான சத்துக்கள் அதிகரிக்கின்றன. மண்ணின் பொலபொலப்பு தன்மை பயிர்களின் வேர்கள் ஆழமாகச் சென்று நீர் மற்றும் ஊட்டச்சத்துக்களை உறிஞ்ச முடியும் என்றும், பயறு வகை சாகுபடிக்கு முன் கோடை மழைக்குப் பின் நிலத்தை உழுவது சிறந்தது. மண்வளம் பெற கோடை உழவு தவறாமல் செய்ய வேண்டும் என்றும், குறுகிய கால பயிர்களான உளுந்து, நிலக்கடலை பயிரிடலாம் என்றும் அந்த பயிர்களில் விதைப்பண்ணை அமைத்து தரமான விதை உற்பத்தி செய்து கூடுதல் லாபம் பெறலாம் எனவும் அயோத்தியா பட்டிணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகப் பிரியா தெரிவித்துள்ளார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# சமச்சீர் உரம் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம்



ராணிப்பேட்டை, மே 13

ராணிப்பேட்டை மாவட்டம், நெமிலி வட்டார வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் மூலம் சமச்சீர் உரம் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு முகாம் வேளாண்மை உதவி இயக்குநர் அருணா குமாரி தலைமையில் ரெட்டிவலம் கிராமத்தில் நடைபெற்றது.

பயிற்சியில் கலந்து கொண்ட விரிஞ்சிபுரம் வேளாண்மை அறிவியல் நிலையம் பேராசிரியர் முனைவர் பரமசிவம் கலந்து கொண்டு மண்ணின் வளத்தை மண் பரிசோதனை (Soil Test) மூலம் கண்டறிந்து, பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் நுண்ணூட்டச்சத்துக்களை, சரியான விகிதத்தில், சரியான நேரத்தில் மற்றும் சரியான முறையில் இடுவதாகும். இது பயிரின் தேவைக்கேற்ப ஊட்டச் சத்துக்களை அளித்து, அதிக மகசூல் பெறவும், மண் வளம் காக்கவும் உதவுகிறது மேலும் இதனால் இராசயன உரப் பயன்பாடு குறைவதால் சாகுபடி செலவு குறைந்து மகசூல் அதிகரித்து விவசாயிகள் அதிகம் லாபம் பெற வழிவகை செய்கிறது என அறிவுறித்தினார். வேளாண்மை அலுவலர் திவ்யஸ்ரீ ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை முறைகள் கடைப்பிடிப்பதால் விவசாயிகளுக்கு உர செலவு குறைந்து பயிர்களின் வளர்ச்சி மற்றும் மண்வளம் பாதுகாக்கப்படுகிறது என பேசினார். உதவி வேளாண்மை அலுவலர் சாரதி வேளாண் விரிவாக்க மையத்தில் நுண்ணூட்டக் கலவைகள் மற்றும் உயிர் உரங்கள் இருப்பு குறித்து பேசினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நிர்மலா தேவி விவசாயிகள் அனைவரும் மண் பரிசோதனை செய்து அதன் அடிப்படையில் தேவைக்கேற்ப உரம் இடுவதின் மூலம் ரசாயன உரப் பயன்பாட்டை குறைக்கலாம் என கூறினார்.

இந்த முகாமில் உதவி தொழில்நுட்ப மேலாளர் முகிலன் மற்றும் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நான்காம் ஆண்டு பலா திருவிழாவில் பங்கேற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல B-2 RAWE மாணவர்கள்



கடலூர், மே 13

கடலூர் மாவட்டம், சிதம்பரம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புலத்தின் B-2 RAWE மாணவர்கள் பண்ருட்டியில் நடைபெற்ற நான்காம் ஆண்டு பலா திருவிழாவில் பங்கேற்று பல்வேறு பலா வகைகள், புதிய கலப்பு ரகங்கள் குறித்து பயனுள்ள அறிவை பெற்றனர். இந்த விழாவில் பலா சாகுபடியில் சிறந்து விளங்கும் விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் வேளாண் ஆர்வலர்கள் ஒன்று கூடி பலா சாகுபடியின் முக்கியத்துவம், சந்தை வாய்ப்புகள் மற்றும் எதிர்கால வளர்ச்சி குறித்து கருத்துகளை பகிர்ந்து கொண்டனர்.

குறிப்பாக, காய்கறி ஆராய்ச்சி நிலையம், பாலூர் சார்ந்த விஞ்ஞானிகள் பலா மரங்களின் பல்வேறு ரகங்கள், உயர்தர கலப்பு இனங்கள், மற்றும் உற்பத்தி திறன் அதிகரிக்கும் தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக விளக்கமளித்தனர்.

மேலும், மாணவர்களின் எதிர்கால வேளாண் பயணத்திற்கு ஊக்க மளிக்கும் வகையில் அவர்கள் வழிகாட்டுதல் வழங்கினர். பலா சாகுபடியில் அனுபவம்மிக்க விவசாயிகள் தங்கள் நேரடி அனுபவங்களை பகிர்ந்து கொண்டு, பலா மர பராமரிப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் இயற்கை முறையில் சாகுபடி செய்வதன் நன்மைகள் குறித்து எடுத்துரைத்தனர்.

மேலும், விழா வளாகத்தில் பல்வேறு இயற்கை விதை விற்பனை நிலையங்கள், பாரம்பரிய விதை கண்காட்சிகள் மற்றும் உயிரியல் விவசாயப் பொருட்கள் மாணவர்களின் கவனத்தை ஈர்த்தன.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# அனைத்து பயிர்களுக்கும் சமச்சீர் விதத்தில் அனைத்து சத்துக்களும் உள்ள ஒருங்கிணைந்த உரம் மேலாண்மை கடைப்பிடிக்க அறிவுரை



பெரம்பலூர், மே 13

பெரம்பலூர் மாவட்டத்தில் சின்ன வெங்காயம், இரவை மக்காச்சோளம், மரவள்ளி, நெல் மற்றும் பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பயிர்களுக்கும் ஆடி உரமாக யூரியாவை பயன்படுத்த வேண்டாம், குறிப்பாக சின்ன வெங்காயத்துக்கு யூரியாவுக்கு பதிலாக எப்போதுமே அமோனியம் சல்பேட் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொரு முறை பயிர் சாகுபடி செய்யும் முன் மண் மாதிரி எடுத்து அதை ஆய்வு செய்து, ஆய்வு அறிக்கை படி ஒருங்கிணைந்த உர மேலாண்மை கடைபிடிக்க வேண்டும் .கிடைக்கக்கூடிய அனைத்து முக்கிய தொழு உரம், மண் புழு உரம், பண்ணை கழிவு உரம் அனைத்து வகையான உயிர் உரங்கள், அனைத்து வகையான நுண்ணூட்ட சத்து உரம் மற்றும் பயிருக்கு தேவையான செயற்கை உரங்களை, சரியான விதத்தில், சரியான பருவத்தில் பயன்படுத்த வேண்டும்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் பாபுவின் அறிவுரையின்படி பெரம்பலூர் வட்டாரத்தில் உரம் விற்பனை நிலையங்களை வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதாகிருஷ்ணன் திடீர் ஆய்வு செய்து, மேற்கண்ட தகவலை கூறினார்.

# கோடை உழவு மற்றும் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தின் இடுபொருள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது

நாமக்கல், மே 13

நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சு.கவிதா வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது, கோடை உழவு என்பது பயிர் சாகுபடி தொழில்நுட்பத்தில் முக்கியமான ஒன்றாகும். கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணில் காற்றோட்டத்தை அதிகரித்து மண்ணில் உள்ள பூச்சிகள், களைகள் மற்றும் கூட்டுப்புழுக்களை சூரிய வெப்பத்தால் அழிக்கும் ஒரு சிறந்த தொழில்நுட்பமாகும். இது மண்ணின் ஈரப்பதத்தை தக்கவைத்து மண்ணரிப்பை தடுத்து மண்ணின் கரிமச்சத்துகளை அதிகரித்து அடுத்த பயிர் சாகுபடிக்கு நிலத்தை வளமானதமாக மாற்றுகிறது.

தற்பொழுது பெய்யும் கோடை மழையை விவசாயிகள் நன்கு பயன்படுத்தி கோடை உழவு மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் தற்பொழுது சாகுபடிக்கு தேவையான சோளம், உளுந்து, பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை விதைகள் மற்றும் இடுபொருட்களான நுண்ணூட்டங்கள், உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் விவசாயிகள் நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டு 50 சதவீத மானியத்தில் இடுபொருட்களை பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.



# திருவள்ளூர் மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்திறன் – ஒரு ஆய்வு

தமிழ்நாட்டில் செயல்பாட்டிலுள்ள நிலங்களின் சுமார் 92 விழுக்காடு சிறு மற்றும் குறு விவசாயிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. இத்தகைய சிறிய அளவிலான விவசாயிகள், நிறுவன கடன் வசதிகளைப் பெறுவதிலும், நவீன வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதிலும், தங்கள் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்டுவதிலும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களை உணர்ந்து, தமிழ்நாடு அரசு 2017-2018 பட்ஜெட்டில் ஒரு புதிய முயற்சியை அறிவித்தது. அதன் படி, சிறு மற்றும் குறு விவசாயிகளை உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் ஆக ஒருங்கிணைத்து, பின்னர் அவற்றை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் ஆக இணைப்பது நோக்கமாகும். இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோள் கூட்டு விவசாயத்தை ஊக்குவித்து, கடன் வசதிகளை மேம்படுத்தி, நவீன தொழில்நுட்ப பயன்பாட்டை அதிகரித்து, முன்நிலை மற்றும் பின்னணி சந்தை இணைப்புகளை வலுப்படுத்துவதாகும்.

கூட்டு விவசாயம் என்ற கருத்து, ஒரே பகுதியைச் சேர்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளை அடையாளம் கண்டு, அவர்களை உழவர்கள்ஆர்வலர்கள் குழுக்கள் ஆக அமைப்பதை உள்ளடக்கியது. ஒவ்வொரு உழவர்கள் ஆர்வலர்கள் குழுக்களும் குறைந்தது 100 விவசாயிகளை கொண்டிருக்கும். இந்த குழுக்கள் கலப்பு விவசாய முறைகளை பின்பற்றி, மைக்ரோ நிறுவனங்கள் மற்றும் விவசாயிகள் நிர்வகிக்கும் சேவை நிறுவனங்கள் மூலம் தங்கள் விளைபொருட்களுக்கு மதிப்பு கூட்ட ஊக்குவிக்கப்படுகின்றன. மேலும், ஒரு பகுதியிலுள்ள சுமார் 10 உழவர்கள் ஆர்வலர்கள் குழுக்கள் இணைந்து ஒரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனமாக ஆக உருவாக்கப்படுகின்றன. இது ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் விரிவுபடுத்தக்கூடிய கூட்டு வேளாண் வளர்ச்சிக்கான ஒரு வலுவான மாதிரியை உருவாக்குகிறது. உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் விவசாயிகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் ஒரு சிறந்த அமைப்பாக உருவெடுத்துள்ளன. உற்பத்தி, பதப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற செயல்பாடுகளில் கூட்டு முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சந்தை தகவல்களைப் பெற உதவுகின்றன, பேச்சு திறனை மேம்படுத்துகின்றன மற்றும் அளவளாவிய பொருளாதார நன்மைகளை உருவாக்குகின்றன. இதன் மூலம், விவசாயிகள் உள்ளீட்டு வழங்குநர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வாங்குபவர்களுடன் திறம்பட பேச்சுவார்த்தை நடத்தும் வலிமையை பெறுகின்றனர்.

திருவள்ளூர் மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், கூட்டு விவசாய முறைகள் மூலம் வேளாண் உற்பத்தித்திறனையும், விவசாயிகளின் வருமானத்தையும் உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

திருவள்ளூர் மாவட்டத்தில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்திறன் ஆய்வு, அந்த மாவட்டத்தில் வேளாண் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலில் ஏற்படுத்தும் தாக்கத்தை மதிப்பிடுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மேலும், அவற்றின் செயல்திறனை பகுப்பாய்வு செய்து, முக்கிய சவால்களை அடையாளம் கண்டு, அவற்றின் செயல்பாட்டு திறன் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்தும் வழிமுறைகளை ஆராய்கிறது.

## ஆய்வு நோக்கங்கள்

1. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் சுயவிவரத்தை பதிவு செய்தல்

2. தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களின் செயல்திறனை மதிப்பீடு செய்தல்

3. நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களை கண்டறிதல்

4. உறுப்பினர்கள் சந்திக்கும் நன்மைகள் மற்றும் சிக்கல்களை பகுப்பாய்வு செய்தல்

5. செயல்திறன் மேம்பாட்டிற்கான விவசாயிகள் மற்றும் பங்குதாரர்களின் பரிந்துரைகளை சேகரித்தல்.

## ஆய்வு முறை

இந்த ஆய்வு திருவள்ளூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்விற்கு நிகழ்வாய்வு முறை பயன்படுத்தப்பட்டது. மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களில் இருந்து நான்கு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி முறையின் மூலம் தேர்வு செய்யப்பட்டன. பின்னர், பதிலளிப்பவர்களை தேர்வு செய்ய சீரற்ற மாதிரி முறை பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களிலிருந்தும் 30 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதன் மூலம் மொத்த மாதிரி அளவு 120 ஆக அமைந்தது.

## தரவு சேகரிப்பு முறை

இந்த ஆய்வு முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. முதன்மை தரவுகள் ஆன்லைன் முறைகள், நேரடி தொடர்பு மற்றும் குழு விவாதங்கள் மூலம் சேகரிக்கப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகள் தொடர்புடைய பங்குதாரர்களிடமிருந்து சேகரிக்கப்பட்டன.

இதில் மாநில சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகத் துறை, தொகுதி மற்றும் மாவட்ட அலுவலகங்கள், மேலும் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுடன் தொடர்புடைய அலுவலகங்கள் ஆகியவை அடங்கும்.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் முக்கிய செயல் திறனுக்கான காரணிகள் பின்வருமாறு**

**1. நிறுவன ஆதரவு அரசு திட்டங்கள் :** தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு, விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி, தமிழக அரசு போன்றவற்றின் திட்டங்களில் அணுகல்.

- **பயிற்சி மற்றும் திறன் வளர்ப்பு :** நிர்வாக மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்த அரசு சாரா அமைப்பு மற்றும் வேளாண் துறைகள் வழங்கும் ஆதரவு.
- **துறைகளுடன் இணைப்புகள் :** வேளாண், தோட்டக்கலை மற்றும் சார்ந்த துறைகளுடன் வலுவான இணைப்புகள்.
- **தலைமைத்துவம் மற்றும் நிர்வாகம் :** திறமையான தலைமை, இயக்கக்குழு மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் சுறுசுறுப்பான மற்றும் பொறுப்புள்ள வராக இருப்பது.
- **தெளிவு மற்றும் பங்கேற்பு :** உறுப்பினர்கள் தீர்மானங்களில் பங்கு பெறுதல்.
- **நல்ல நிர்வாக நடைமுறைகள் :** பராமரிப்பு கணக்கெடுப்பு, கூட்டங்கள் மற்றும் தெளிவான பதிவேட்டுகள்.

**2. உறுப்பினர் பங்கேற்பு**

- **செயல்பாட்டில் பங்கு :** விவசாயிகள் செயல்பாடுகள் மற்றும் தீர்மானங்களில் பங்கேற்பு.
- **முடிவு நிதி பங்கு :** உறுப்பினர்களின் நிதி பங்கு பொறுப்பு உணர்வை அதிகரிக்கும்.
- **நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பு :** உறுப்பினர்களுக்கு சொந்த உரிமை உணர்வு மற்றும் கூட்டமைப்பு.

**3. சந்தை இணைப்புகள்**

- **சந்தைகளுக்கு அணுகல் :** வாங்குநர்கள், சில்லறை விற்பனையாளர் மற்றும் செயலாளர்களுடன் நேரடி இணைப்புகள்.
- **விலை நிலை :** மேம்பட்ட விலை பேச்சுவார்த்தை திறன், நடுத்தர வர்த்தகர்களை தவிர்க்கும் திறன்.
- **வணிகக் குறியிடல் மற்றும் மதிப்பு கூட்டல் :** உள்ளூர் பிராண்டிங் மற்றும் பேக்கேஜிங் விற்பனையை அதிகரிக்கும்.

**4. நிதி நிலை**

● **மூலதனம் :** செயல்பாடுகளுக்கு போதுமான ஆரம்ப மற்றும் பணப்புழக்க மூலதனம்.

● **கடன் அணுகல் :** வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களிட மிருந்து சிறந்த நிபந்தனைகளில் கடன் பெறுதல்.

● **லாபம் மற்றும் மீள்முதலீடு :** கூடுதல் லாபத்தை மீள்முதலீடு செய்து செயல்பாடுகளை விரிவுபடுத்துதல்.

**5. உட்பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் சேமிப்பு மற்றும் போக்குவரத்து** : களஞ்சியங்கள், குளிர்சாதன வசதி மற்றும் போக்குவரத்து வசதிகள்.

● **எண்முறை கருவிகள் :** கணக்கெடுப்பு, சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பிற்கான தகவல் தொழில்நுட்பம்.

● **உற்பத்தியின் உள்ளீடுகள் :** விதைகள், உரம் போன்றவற்றை தொகுப்பாக வாங்குதல் மற்றும் காலக்கெடு முறைப்படி விநியோகம்.

**6. வெளிப்புற சூழல் காலநிலை மற்றும் நீர் கிடைக்கும் நிலை :** மழை, வறட்சிக் காலம் அல்லது வெள்ளம் போன்றவற்றின் தாக்கம்.

● **பயிர் முறைமைகள் :** கூட்டு சந்தைப்படுத்தலுக்கு ஏற்ப பயிர்கள் பொருத்தமாக இருப்பது.

● **சமூக-பொருளாதார நிலைகள் :** எழுத்தறிவு, நிலப்பரப்பு, வருமான அளவு போன்றவை.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் முக்கிய பிரச்சினைகள்**

**அட்டவணை 1**

(n=120)

| வ எண் | விவரங்கள் | எண்கள் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மூலதனம் மற்றும் கடன் வசதி | 62.00 | 51.7 |
| 2. | நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறைபாடுகள் | 48.00 | 40.0 |
| 3. | சந்தை அணுகல் குறைவு | 67.00 | 55.8 |
| 4. | உறுப்பினர் பங்கேற்பு குறைவு | 72.00 | 60.0 |
| 5. | உள்கட்டமைப்பு குறைபாடுகள் | 57.00 | 47.5 |
| 6. | கொள்கை சிக்கல்கள் | 69.00 | 57.5 |
| 7. | பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் குறைபாடுகள் | 55.00 | 45.8 |
| 8. | வெளி ஆதரவு சார்பு | 86.00 | 71.7 |

மேலே உள்ள அட்டவணை1 அடிப்படையில், பதிலளித்தவர்களில் 50 விழுக்காடு உறுப்பினர்கள் மூலதனம் மற்றும் கடன் வசதிகளைப் பெறுவதில் சிரமம் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். போதுமான நிதி வளங்கள் இல்லாததால், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் சொத்துகளில் முதலீடு செய்யவும், உள்ளீடுகளை மொத்தமாக வாங்கவும், செயல்பாடுகளை விரிவுபடுத்தவும் முடியாமல் திணறுகின்றன. மேலும், முறையான கடன் வசதிகள் குறைவாக இருப்பதால், அதிக வட்டி வசூலிக்கும் அங்கீகரிக்கப்படாத கடன் ஆதாரங்களின் மீது சார்ந்திருக்க வேண்டிய நிலை உருவாகிறது.

பதிலளித்தவர்களில் 40 விழுக்காடு பேர் நிர்வாகம் மற்றும் மேலாண்மை குறைபாடுகள் குறித்து சிக்கல்கள் இருப்பதாக தெரிவித்துள்ளனர். திறமையற்ற தலைமைத்துவம், பொறுப்புத் தன்மை இல்லாமை, திட்டமிடல் குறைபாடு போன்றவை தவறான முடிவெடுப்புகளுக்கும், நிதி தவறான பயன்படுத்தலுக்கும், உறுப்பினர்களிடையே நம்பிக்கை குறைவுக்கும் வழிவகுக்கின்றன. இதனால் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் நிலைத்தன்மை பாதிக்கப்படுகிறது. 55.8 விழுக்காடு பேர் பரந்த சந்தைகளை அணுகுவதில் கட்டுப்பாடுகள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளனர். சரியான பிராண்டிங் இல்லாமை, வாங்குபவர் களுடன் தொடர்பு குறைவு, போக்குவரத்து சிக்கல்கள் போன்ற காரணங்களால் சந்தை வாய்ப்புகள் குறைகின்றன. இதனால் உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் தங்கள் உற்பத்திகளை குறைந்த விலைக்கு உள்ளூர் வியாபாரிகளுக்கு அல்லது நடுவணருக்கு விற்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

உறுப்பினர்களின் செயல்பாட்டு ஈடுபாடு குறைவாக இருப்பதாக 60 சதவீதம் பேர் தெரிவித்துள்ளனர். ஊக்கங்கள் இல்லாமை, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பயன்கள் பற்றிய குறைந்த புரிதல், நேரம் பற்றாக்குறை போன்றவை இதற்குக் காரணமாகும். இது குழு வலிமையையும், தீர்மான எடுப்புத் திறனையும் பாதித்து, உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பேச்சுவார்த்தை சக்தியையும் செயல்பாட்டு திறனையும் குறைக்கிறது.

உள்கட்டமைப்பு குறைபாடுகளை 47.5 சதவீதம் பேர் சுட்டிக்காட்டினர். கிடங்குகள், தரப்படுத்தும் மையங்கள், குளிர்சாதன வசதிகள் போன்றவை இல்லாமை செயல்திறனை குறைத்து, அறுவடை பிந்தைய இழப்புகளை அதிகரித்து, மதிப்புச் சங்கிலி வளர்ச்சியைத் தடுக்கிறது.

கொள்கை மற்றும் ஒழுங்குமுறை தடைகள் இருப்பதாகக் 57.5 சதவீதம் பேர் கூறினர். சிக்கலான விதிமுறைகள், பதிவு செயல்முறை

சிரமங்கள், போதிய அரசு ஆதரவு இல்லாமைபோன்றவை உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் செயல்பாடுகளை பாதிக்கின்றன. அரசு திட்டங்கள் மற்றும் விதிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு குறைவும் இந்த சிக்கலை அதிகரிக்கிறது.

பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டில் குறைபாடுகள் இருப்பதாகக் 45.8 சதவீதம் பேர் குறிப்பிட்டுள்ளனர். மேலாண்மை, சந்தைப் படுத்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான தொடர்ச்சியான பயிற்சி இல்லாததால், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் திறன்களை மேம்படுத்தவும், சந்தை மாற்றங்களுக்கு தகுந்து செயல்படவும் முடியாமல் உள்ளன.

அனைத்திலும் முக்கியமான சிக்கலாக, 71.7சதவீதம் பேர் வெளிப்புற ஆதரவை அதிகமாக சார்ந்து இருப்பதை குறிப்பிட்டு உள்ளனர். ஆரம்ப கட்டத்தில் அரசு அல்லது தன்னார்வ அமைப்பு களின் ஆதரவு அவசியமானதாயினும், நீண்டகாலமாக அதன்மீது சார்ந்து இருப்பது சுயநிறைவு மற்றும் நிலைத்தன்மையை பாதிக்கிறது. இது உறுப்பினர்களின் முனைப்பை குறைத்து, சுயாதீன வணிக வளர்ச்சியை தாமதப்படுத்துகிறது.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் உறுப்பினர்கள் உணர்ந்த நன்மைகள்**

**அட்டவணை – 2**

**(n - 120)**

| வ எண் | விவரங்கள் | எண்கள் | சதவீதம் |
|---|---|---|---|
| 1. | மேம்பட்ட நல்ல சந்தை அணுகல் | 82.00 | 68.3 |
| 2. | குறைந்த செலவில் வேளாண்மை உள்ளீடுகள் | 92.00 | 76.7 |
| 3. | விவசாய விளைபொருட்களுக்கு சிறந்த விலை | 84.00 | 70.0 |
| 4. | அரசு ஆதரவுகளை எளிதாக பெற முடிகிறது | 67.00 | 55.8 |
| 5. | நிதி வளங்கள் மற்றும் கடன் வசதி களுக்கான அணுகல் மேம்பட்டுள்ளது | 56.00 | 46.7 |
| 6. | மதிப்பூட்டல் மற்றும் செயலாக்கத்தில் முன்னேற்றம் | 53.00 | 44.2 |
| 7. | திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்றுள்ளனர் | 64.00 | 53.3 |
| 8. | இடர் மேலாண்மை எதிர்கொள்ளக்கூடிய திறன் | 65.00 | 54.2 |

நாளை தொடரும்...

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**